30th March 1959]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, the Hon. Minister said that there were other proposals also for expansion. Arising out of that answer, I put the question.

MR. SPEAKER : With due apology to the Leader of the Opposition, I must say that the same idea (as that of the Minister) was passing through my mind also.

SRI T. KARIA GOUNDER : தலைவர் அவர்களே, இதற்காக வசூல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு ? இப்போது அந்தத் தொகை கட்டிடம் கட்டுவதற்கு போதியதாக இருக்காது என்ற காரணத்தினால் இதை கைவிட்டதாக இருப்பதால் அரசாங்கமே அந்த இடத்தை எடுத்து ஒரு ஸானிட்டோரியத்தை கட்டுவதற்கு உத்தேசமிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : புதிதாக ஸானிட்டோரியம் ஆரம்பிப்பதற்கு ஏராளமான பணம் வேண்டும். இதற்கு வசூல் செய்த தொகை 2,31,600 ரூபாய். இதில் ஒரு லட்சத்தி எண்பத்தி நாலாயிரம் ரூபாய் செலவில் ஒரு வார்டு கட்டுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER : Hon. Members are entitled to ask, 'How much it would require to build a sanatorium?' I am only putting forth a suggestion. Not that hon. Members should put questions.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, இருக்கின்ற பணத்தைக்கொண்டு நல்ல கட்டிடம் கட்டமுடியாமல் இருப்பதால் பசுமலைக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கட்டிடத்தில் மேற்படி ஸானிட்டோரியத்தை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உதவி செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பசுமலைக்குப் பக்கத்தில் டி.பி. ஸொஸ்தமாகியிருப்பவர்கள் டிஸ்சார்ஜ் ஆன பிறகு போய் இருப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகவே இதற்கு தனியாக அருகாமையில் ஒரு வார்டு இருந்தால்தான் சௌகரியமாக இருக்கும். அதனால்தான் ஆஸ்பத்திரியின் பக்கத்தில் இந்த வார்டு கட்டப்பட வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : இதற்காக வசூல் செய்யப்பட்ட பணத்தில் கொஞ்சம் தொகை போக்கு போய்விட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்விதம் போக்கு போனது எவ்வளவு ? அதற்கு காரணம் யார் ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : போக்கு போனது தோராயமாக, 5, 10 ஆயிரம் ரூபாய் இருக்கும். இதற்கு காரணம் அந்த அசோஸியேஷன் ஸெக்ரட்டரியாக இருந்தவர்தான் என்று சொல்லப்பட்டது.

*Supply of water from Papanasam dam*

*1062 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state the basis on which water is let down the Papanasam Hydro-Electric Dam for irrigation purposes?

THE HON. SRI P. KAKKAN : Water is let down in accordance with the rules of regulation of water from the Papanasam Hydro-Electric Reservoir approved by Government. A copy [a] of the rules is placed on the table of the House.

---

a Printed as Appendix I on pages 927–928 infra.

[30th March 1959

SRI K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, தண்ணீர் கொடுப்பதில் பல குறைகள் இருந்து வருவதாக சொல்லப்படு கின்றன. சில இடங்களில் அதாவது கடைக்கோடியில் இருப்பவர்களுக்கு முதலிடம் கொடுத்து வருவதாக சொல்லப்படுகிறது. இம்மாதிரிப்பட்ட குறைகளை எல்லாம் தவிர்ப்பதற்கு அந்த இடத்திலுள்ள மக்களின் பிரதி நிதிகளேயும், அங்கு இருக்கக்கூடிய நிலசுவான்தார்களேயும், அரசாங்க அதி காரிகளேயும் சேர்த்து ஒரு கமிட்டி அமைத்து இதைப்பற்றி பரிசீலனை செய்து ஒரு திட்டவட்டமான முடிவு எடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தண்ணீர் விடும்போது பொதுவாக மேலே இருப்பவர்களுக்குப் பாதகமாகவும், கீழே இருப்பவர்களுக்கு சாதக மாகவும் தண்ணீர் விடுகிறார்கள் என்றால் அங்கு இருக்கின்ற இன்ஜினியர் போன்ற சர்க்கார் அதிகாரிகள் மக்களிடம் ஓரவஞ்சகமாகத்தான் நடந்து கொள்ளுகிறார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அவ்விதம் அவர்கள் நடந்து கொண்டிருப்பார்கள் என்று அரசாங்கம் கருதவில்லை. மேற் கொண்டு ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் ஆதார பூர்வமான குறைகள் இருக்குமானால், அவற்றை எழுதிக்கொடுத்தால் அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

*Vaigai Reservoir*

* 1063 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is a proposal by the Government to install a generating plant and utilize Vaigai Reservoir water for generating power also?

THE HON. SRI R. VENKATARAMAN : There is a proposal to install a generating plant at Vaigai Project at a future date, if considered necessary. With this in view two pipes of 10 feet diameter have been fixed at Vaigai Dam to feed two generators that mgiht be installed at a latter date. The capacity of each generator has been tentatively fixed at 5,400 K.W.

SRI V. SANKARAN : தண்ணீரைக் கோடைக்காலத்தில் மின்சாரத் துக்குப் பயன்படுத்தினால் விவசாயத்திற்குப் பாதகம் ஏற்படாதா ? அப்படி யானால் அதன் பேரில் என்ன முடிவு எடுக்கப்படும் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir this is like counting tea chickens before, they are hatched. இன்னும் அதைப் பற்றி முடிவு ஒன்றும் எடுக்கவில்லை. வைகை திட்டத்திலிருந்து இப்போது தான் தண்ணீர் உபயோகப்படுத்தி வருகிறோம். இதைப் பற்றி இனி மேல்தான் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.

*Medicines containing intoxicants*

* 1064 *Q*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1957–58-ல் மெடிகேடட் ஸ்ப்ரிட் போன்ற போதை வஸ்துக்கள் கலந்த மருந்து விற்பனை மூலம் நடைபெறும் மதுவிலக்குக் குற்றம் சம் பந்தமாக கண்டுபிடிக்கப்பட்ட கேஸ்கள் எத்தனை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, 212 cases of illicit sale of medicines, containing intoxicants like medicated spirit, were detected in this State during the year 1957–58.